பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 08 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற இந்திய அணியினர் தேசத்திற்கு பெருமையை தேடித் தந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக திருத்த மசோதா உள்ளிட்ட பல முக்கிய மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட உள்ளன.

3. இணையவழி குற்றங்களைத் தடுக்க தமிழக காவல்துறை தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. மகேஷ் குமார் அகர்வால் தெரிவித்துள்ளார்.

4. தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு இன்று மாநிலம் முழுவதும் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பசந்த் குமார் மேக்வால் மற்றும் ஷாநவாஸ் கான் ஆகியோர் பதக்கம் வென்றுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற இந்திய அணியில் இடம்பெற்ற ஒவ்வொருவரும் தங்களின் சிறப்பான செயல்பாடுகள் மூலம் தேசத்திற்கு பெருமையை தேடித் தந்துள்ளனர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று நாடு திரும்பியுள்ள இந்திய அணியினர் புதுதில்லியில் நேற்று பிரதமரை சந்தித்துப் பேசினர்.

அவர்களிடம் பேசிய பிரதமர், அவர்களின் வெற்றி பல இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் என்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நாட்டிற்காக விளையாடும் இந்திய அணியினரை நாட்டு மக்கள் அனைவரும் வாழ்த்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் இன்று பல முக்கிய மசோதாக்கள் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட உள்ளன.

கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக திருத்த மசோதாவை இன்று மக்களவையில் அறிமுகம் செய்கிறார்.

கேரள மாநில பெயரை அதிகாரபூர்வமாக கேரளம் என்று மாற்ற வகைசெய்யும் மசோதாவையும் அவர் மக்களவையில் தாக்கல் செய்ய உள்ளார்.

தீர்ப்பாயங்களின் தலைவர்கள், உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் சேவையில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வர வகை செய்யும் தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதாவை மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் தாக்கல் செய்ய உள்ளார்.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட வரி மற்றும் பிற சட்டங்கள் தொடர்பான திருத்த மசோதாவை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் இன்று தாக்கல் செய்ய உள்ளார்.

வெளிநாட்டு நன்கொடைகள் திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

இணையவழி குற்றங்களைத் தடுக்க தமிழக காவல்துறை தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. மகேஷ் குமார் அகர்வால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், இணைய குற்றங்களுக்கு உதவியதாக 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காவல்துறையின் இணையவழி குற்றப்பிரிவு சார்பில் கடந்த 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் மாநிலம் முழுவதும் இணைய குற்றங்களுக்கு உதவுவதற்காக தொடங்கப்பட்ட வங்கி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு எதிராக சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இணைய குற்றங்கள் மூலம் பெறப்படும் பணத்தைப் பெறுவதற்கும், பரிமாற்றம் செய்வதற்கும் பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றவும் முயற்சி செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணைய குற்றத்தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குற்றவாளிகளின் விவரங்களை பகுப்பாய்வு செய்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் திரு. மகேஷ் குமார் அகர்வால் கூறியுள்ளார்.

<<<<>>>>

இல்லம்தோறும் தேசியக் கொடி இயக்கத்தின் ஒரு பகுதியாக சென்னையில் நேற்று மாநில பிஜேபி சார்பில் மூவர்ண கொடி பேரணி நடைபெற்றது.

சென்னை திநகரில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், அக்கட்சியின் தேசிய செயலாளர் திரு. அரவிந்த் மேனன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அனைவரும் தேசியக்கொடியை கைகளில் ஏந்தி தேசபக்தி முழக்கங்களை எழுப்பி ஊர்வலமாகச் சென்றனர்.

<<<<>>>>

காவிரியில் தமிழ்நாட்டுக்கு உரிய நீர்ப்பங்கீட்டை கர்நாடகா வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

திருச்செங்கோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என்பதில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தில் உள்ளதாக கூறினார்.

மேட்டூர் உபரி நீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் அரசியல் கட்சிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருவதாகவும், அதை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு இன்று மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் பிற சுகாதார நிலையங்களில் குடற்புழுவை கட்டுப்படுத்துவதற்கான குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

(Voice Byte – Rajendran – 52 Sec)

<<<<>>>>

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 123 அடியை எட்டியுள்ளது.

இதனால் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கேரளம் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

குறிப்பாக பெரியாறு மற்றும் தேக்கடி ஆகிய அணைப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் முல்லைப்பெரியாறு அணைக்கு வரும நீரின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

மத்திய அரசின் அடல் புத்தாக்க இயக்கம் இளம் அறிவியல் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் பள்ளி மாணவர்கள் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 53 Sec)

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

காசாவில் இருந்து இஸ்ரேல் படைகள் முழுவதுமாக வெளியேற வேண்டும் என்றும், பாலஸ்தீன மக்களுக்கு நிவாரண உதவிகள் தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும் எகிப்து கூறியுள்ளது.

------------

சிரியாவில் உள்ள ரஷ்யாவின் இரண்டு ராணுவ தளங்கள் இரு நாடுகளுக்கிடையிலான கூட்டு ராணுவ பயிற்சி தளங்களாக மாற்றப்படும் என்று சிரியா கூறியுள்ளது.

------------

இந்தியா - அமெரிக்கா இடையே கூட்டுக் கடற்படைப் பயிற்சி கொச்சியில் இன்று தொடங்குகிறது.

------------

இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கத்தை அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில் அம்மாநில துணைநிலை ஆளுநர் திரு. K.T. பட்நாயக், முதல்வர் பேமா காண்டு ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

------------

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியை அடுத்த புனித அந்தோனியார் ஆலயத்தின் ஆண்டுப் பெருவிழாவையொட்டி திருத்தேர் பவனி நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

------------

ரயிலில் கடத்தி வரப்பட்ட 10 கிலோ எடையுள்ள போதைப்பொருட்களை திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையினர் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

------------

தூத்துக்குடி மாவட்டம் ஏரல், விளாத்திக்குளம் வட்டங்களில் உப்பளத் தொழிலாளர்களுக்கான சிறப்பு சேவை முகாம் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

------------

சென்னை மெரினா கடற்கரையில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பசந்த் குமார் மேக்வால் மற்றும் ஷாநவாஸ் கான் ஆகியோர் பதக்கம் வென்றுள்ளனர்.

ஆடவர் உயரம் தாண்டுதல் போட்டியில் பசந்த்குமார் மேக்வால் 2 புள்ளி இரண்டு ஒன்று மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

நீளம் தாண்டுதல் போட்டியில் ஷாநவாஸ் கான் 7 புள்ளி எட்டு நான்கு மீட்டர் நீளம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்றார்.

இவரும் இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஏற்கனவே ஈட்டி எறிதலில் இந்திய வீரர் ஆஷிவ் யாதவ் வெள்ளிப் பதக்கம் வென்றதையடுத்து, இந்தப் போட்டியில் இந்தியா வென்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை 3ஆக அதிகரித்துள்ளது.

<<<<The End>>>>